



ரூ.20/-

## உள்ளே..........................


| | | | |
|---|---|---|---|
| 1. | கண்ணைத்துயின்றவமே காலத்தைப் போக்காதே | | 1 |
| 2. | திருக்கூத்துத் தரிசனம் | மௌனாச்சிரமம் | 2 |
| 3. | தமிழர் சமய நெறிக்குப் பெயர் சைவம் அல்லதில்லை | பண்டிதர் மு. கந்தையா | 3 |
| 4. | சைவசித்தாந்தம் | ஞானப்பிரகாசசிவம் | 5 |
| 5. | சாக்கியநாயனார் | சிவசண்முகவடிவேல் | 8 |
| 6. | திருவாசகச் சிந்தனை திருவெம்பாவை | பண்டிதர். சி. அப்புத்துரை | 9 |
| 7. | மாத மகத்துவம் திருவாதிரை | செ. நவநீதகுமார் | 11 |
| 8. | ஆராத்திரிகை | | 12 |
| 9. | திருவாதவூரரும் நம்பியாரூம் | முருக. வே. பரமநாதன் | 13 |
| 10. | ஆணவம் | சோ. குமுதா | 14 |
| 11. | பயில்வோர் பயிற்சிக்கு | மாதினி | 15 |
| 12. | சிவ சின்னங்கள் தீவினை அகற்றும் திருநீறு | செ. நவநீதகுமார் | 16 |
| 13. | திருநீற்றுப் பதிகம் | | 18 |
| 14. | நினைவிற் கொள்வதற்கு | | 19 |

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர்: 1 ஈசுர மார்கழி சைவ சமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ்: 9

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி வித்துவான்
**திரு. வ. செல்லையா**

நிர்வாக ஆசிரியர்
சிவஸ்ரீ பால ரவிசங்கரக்குருக்கள்
**திரு. செ. நவநீதகுமார்**

42, டிவாஸ் ஒழுங்கை
கிராண்ட்பாஸ்
கொழும்பு 14.
தொலைபேசி : 423895

பதிப்பாசிரியர்
**திரு. ச. சக்தி விக்னேஸ்வரன்**

## கண்ணைத்துயின்றவமே காலத்தைப் போக்காதே.

இது மார்கழி மாதம். இறை வழிபாட்டிற்கு உரிய சிறந்த மாதம். அதனாற் போலும் திருமணம் போன்ற சுபகருமங்களை இம் மாதத்திற் செய்யாது இறை வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

மானுட வருடமொன்று தேவர்களுக்கு ஒருநாள். வைகறைப் பொழுது மார்கழி மாதம். இம்மாதத்தில் அதிகாலையிற் செய்யும் பூசை வழிபாடென்பன பயன் மிகுத்தன. இக்காலம் குளிர்

காலம். ஆதலால் அதிகாலையில் நித்திரை விட்டெழச் சற்றுச் சிரமமாக் இருக்கும். உடல் உறக்கத்தை நாடுகின்றது. உள்ளத்திலே இறை வழிபாடு செய்ய வேண்டுமென்ற எண்ணம் எழுந்தால் அந்த ஆர்வ உந்தல் உடற் சுகத்தை வெறுத்து அதிகாலை குளிர் நீரிலே நீராடி இறைவனைப் பாடிப்பணிதலே பிறவிப்பயன் என்றநிலை தோன்றும்.

மார்கழி மாதம் பிராதக்காலத்தில், பெண்கள் நீராடி வீட்டு முற்றத்திலே மாக்கோலமிட்டு பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவர். அதிகாலையில் அடியார் கூட்டம் மாதேவன் வார் கழல்களை வாழ்த்திப் பாடி வீதிவழிச்செல்வர். விருப்பொடு வெண்சங்கமூதி, வன்நெஞ்சப் பேதையர் போல் இன்னுந் துயிலுதியோ? கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே. விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக் கண்ணுக்கினியானைப் பாடிப் பணிவதற்கு எழுந்து வா என ஒருவரை ஒருவர் எழுப்புங் காலமும் இதுதான்.

வணங்கத் தலை வைத்து, வார்கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்த அந்த ஆனந்தக் கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்திப் பாடிப்பணிய வேண்டும்.

உன்னடியார் எங்கணவராக வேண்டும் எனக் கன்னியர் நோற்கும் பாவை நோன்பு திருவெம்பாவை. இக்காலத்தில் திருமுறைகளைத் திருக்காப்பிட்டு வைத்துத் திருவாசகத்தை மாத்திரம் ஓதுவர். திருவாசக முற்றோதல் பல இடங்களில் ஓதப்படுகின்றது. திருவாதிரை அன்று திருவெம்பாவைப் பாடல்கள் ஓதிய பின்பு தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பன ஓதலாம்.

தேவர் கனாவிலும் கண்டறியாத பரம்பொருளை அறிவதற்கு, அடைவதற்கு ஏதுவான இடம் இவ்வுலகு. அதனால் புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே என்று திருமால், பிரமன் ஆகியோர் நினைக்கின்றார்கள்.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருள், இவ்வுலகில் எளிதில் வந்து அருளும் தன்மையால், எம்மை மண்ணுலகில் வந்து வாழச் செய்த சிவபெருமானை வாழ்த்தி வணங்குவோமாக.

திருமூலர் திருமந்திரம்

# திருக்கூத்துத் தரிசனம்.

மௌனாச்சிரம்.

வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆடக்
கீதங்கள் ஆடக் கிளர் அண்டம் ஏழு ஆடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுது ஆட
நாதங் கொண்டு ஆடினார் ஞான ஆனந்தக் கூத்தே. 2729

சப்தப் பிரமாணங்கள் அனைத்தும் மாற்றத்திற்கு - பரிமாறுதலுக்கு உட்பட்டவண்ணம் உள்ளன. அன்பின் மிகுதியால் வெளிப்படும் இறைஆகமங்களும் பரிமாற்றத்திற்குட்பட்டவண்ணம் உள்ளன.

சாம வேத கீத கானங்கள் ரீங்காரம் செய்கின்றன. ஏழு ஏழு பிரபஞ்சங்களாக உள்ள சர்வ பிரபஞ்சங்களும் தூய வெறு வெளியில் அற்புதமான ஒழுங்கில் ஆடியவண்ணம் உள்ளன.

ஐந்து வகையான பூதங்களும் :நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்: நெறி நெறியாக வகை வகையாகப் பரிமாறுதலுக்கு உட்பட்டவண்ணம் உள்ளன. மிக மிகச் சூக்குமமாக உள்ள புவனங்களும் மடை மாற்றத்திற் குட்பட்ட வண்ணம் உள்ளன.

இவை அனைத்திற்கும் ஊடாக, இவை அனைத்திற்கும் மத்தியில், சர்வத்தின் வெளியேயும் இறைவர் நாத வடிவாக - அதிர்வு வடிவாக, நித்திய - நிரந்தர நிலையில் இருந்த வண்ணம் மெய் ஆனந்தமாக அற்புதக்கூத்தாக அற்புத நடனமாக மாற்றமின்றி, என்றும், எங்கும், எப்பொழுதும் ஆடிய வண்ணமுள்ளார்.

குறிப்பு - ஆறு அந்தங்களின் முடிபில் இறை ஆகமம் வெளிப்படும்.

1 . போகாந்தம் 2 . யோகாந்தம்
3 . வேதாந்தம் 4 . சித்தாந்தம்
5 . காலாந்தம் 6 . நாதாந்தம்.

### ஞான நடனம்

| | | |
|---|---|---|
| உடுக்கை ஏந்திய கரம் | - | மாயா மல நீக்கம் |
| அக்கினி ஏந்திய கரம் | - | கன்ம மல நீக்கம் |
| ஊன்றிய திருவடி | - | ஆணவ மல வலி குன்றல் |
| தூக்கிய திருவடி | - | அருளே தனுவாக நிறுத்தல் |
| அபயகரம் | - | பேரின்பமளித்தல். |

# தமிழர் சமயநெறிக்குப் பெயர் சைவம் அல்லதில்லை.

பண்டிதர் மு. கந்தையா

தமிழர் சமயநெறி சிவனையே முழுமுதல் இறைவனாகக் கொண்டு வழிபட்டுச் சிவனை ஆன்மா சென்றடையும் இலட்சியமுள்ள ஒரு தனி நெறியாகும். இம்மை, மறுமை, அம்மை மூன்றுக்கும் சிவன் சார்பை விடாதிருக்கும் நெறி ஆதலால் இது சைவம் எனப்பட்டது. சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது என இத்தன்மையைப் புலப்படுத்தியுள்ளார் திருமூலர்.

வேதத்தோடு ஒத்த பழமை உடையன எனப்பேசப்படுஞ் சிவாகமங்களில் இவ்வியல்பு ஆணித்தரமாக நிலை நிறுத்தப் பெற்றுள்ளது. அதற்கடுத்தபடி பழமை வாய்ந்தனவாகிய சங்கஇலக்கியங்களில் தற்போது கிடைக்கக் கூடியனவாகவுள்ள சிலவற்றில் இதற்காதாரமுண்டு. மத்திய காலத்தில் தஷிண தேசத்தில் நிலவிய சைவ மடங்கள் சிவாகம ஆய்வியல் ரீதியாக இவ்வுண்மையை விளக்கிப் பல வேறு நூல்களாகப் பிரசுரித்திருக்கின்றன. தொடர்ந்து வந்தருளிய சைவ சமயாசாரியர்கள் இதனை உரத்த குரலிற் பிரகடனப் படுத்தியுள்ளார்கள். அவர்களின் அருளிப் பாடல்களான திருமுறைகள் இதனை மக்கள் மனங்கொள்ள அழுத்தி வைத்திருக்கின்றன. தொடர்ந்து வந்த சந்தானாசாரியர்கள் தங்கள் மெய்கண்ட சாத்திரங்களால் தருக்க ரீதியாக ஆராய்ந்து சித்தாந்தஞ் செய்திருக்கிறார்கள். அடுத்துத் தோன்றிய சைவாதீனங்கள் ஆதீன அமைப்பில் வைத்து இதனைப் பேணியுள்ளன. நம்மவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உன்னதத் தொனியில் இதனை மீள் பிரகடனம் பண்ணி வைத்திருக்கிறார். அவர் வழி மரபு பேணிய ஆன்றோரெல்லாம் அதனை வழிமொழிந்து வந்திருக்கிறார்கள். தமிழகத்துச் சிவாலயங் களெல்லாம் இவ்வுண்மைக்குக் கலங்கரை விளக்கமாய் நிலவிக்கொண்டிருக்கின்றன. நீண்ட இவ்வரலாற்றுத் தொடரில் எங்கேனுந் தமிழர் சமய நெறிக்குச் சைவம் என்ற பெயரல்லது வேறெதுவுங் காணப்பட்டதில்லை.

இனி பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளிப் பல்லுலகினில் உயிர்வாழ்க்கை கண்ட நாதனார் - என்பது நமது திருக்கேதீச்சரத் தேவார உண்மைகளிலொன்று. அநாதி தொட்டே பல வேறு ஊளிகளாகப் பல வேறு உலகுகளில் உயிர் வாழ்க்கை நிகழக்கண்டவர் சிவபெருமான். அதாவது காலா காலமாக உயிர்கள் வாழ்ந்து ஈடேற ஆவனவெல்லாம் அறிந்து இயற்றிக்கொண்டிருப்பவர் அவர் என்பது இதன் தாற்பரியம். அதன் சார்பில் தன் கருணைக் கைங்கரியமாகிய ஐந்தொழில் நிகழ்த்த வேண்டியவர் அவர். அதில் விசேடமாக, அவ்வப்போது தர்மத்தை அழிக்க முற்படும் அசுரசக்திகளை நாசம் பண்ணவேண்டியவர் அவர். மெய்யுணர்ந்து தன்னை நாடும் பக்குவ ஆன்மாக்களுக்கு அவ்வப்போது வேண்டுவன செய்தற்கு உருக்கொண்டு பிரசன்னமாக வேண்டிய வரும் அவர். அந்நோக்கில் அவர் தாமாக மேற்கொண்டு காட்சியளிக்கும் உருவபேதங்களும் பல, பல பல வேடமாகும் பரன் நாரிபாகன் என்பது பலரும் அறிவதொன்று. அக்கோலங்களே, சக்தி, விஷ்ணு, விநாயகர், குமரன், வைரவர், வீரபத்திரர் முதலியனவாக உள்ளவை. மகான் ஒருவரை அபிமானிக்கிறவர்கள் அவர் பல பல நிலைகளில் தோன்றும் நிழற் படங்களையெல்லாம் பேணிப் போற்றுதல் போலச் சிவபெருமானை முழு முதல்வனாக வழிபடுவோர், அவர் தாமாக மேற்கொண்ட வடிவபேதங்களையும் வழிபடுதல் இயல்பே. மிகப் பழங்காலந் தொட்டே அவ்வழக்கம் இருந்திருப்பதாற் சிவாகமங்களிலேயே, அவற்றைச் சிவாலயங்களில் பரிவார மூர்த்திகளாக நிறுவி வழிபடுதற்காம் வகை துறைகள் வகுக்கப்பட்டாயின.

அதற்கிணங்கச் சிவனை மூலமூர்த்தியாகக் கொண்ட கோயில்களில் சிவ வழிபாட்டோடு ஒருமுகப்பட்ட வழிபாடாக அம்மன், விஷ்ணு முதலிய மூர்த்திகளின் வழிபாடும் நிகழ்ந்து வருகையில், வழிபடுவோர் அம்மூர்த்திகளில் தமது அதிக பிரியத்திற்குரிய ஒன்றுக்குத் தனிக்கோயிலொன்ற மைத்து அதன் மூலஸ்தானத்தில் அமர்த்தும் மூர்த்தியைச் சிவமாகவே பாவித்து வணங்கும் வழக்கமும் உண்டாகி அவையுஞ் சிவாகமங்களில் விதிமுறை விளக்கம் பெறலாயின. அவ்வகையில் அம்மன் கோயில், விஷ்ணு கோயில், விநாயகர்

கோயில், குமரன் கோயில், வைரவர் கோயில்கள் பல்கியபோதும். அனைத்துஞ் சிவாலயமென்ற வழக்கில் வேறுபட்டதுமில்லை. நித்திய நைமித்திக அனுசரணைகளில் வேறுபட்டதுமில்லை. அன்றுமப்படி, இன்றுமப்படி இது மாறாநியதியாகவே இருந்து வருகிறது. சூரியன் மத்தியில் சிவன் விசேடமாகப் பிரகாசிக்கிறார் என்ற உண்மையையும் சிவகதி சேரும் ஆன்மா சூரிய மண்டல வழியாக மேற் செல்கின்றது என்ற உண்மையையும் ஒட்டிச் சிவாலயங்களிற் சூரியமூர்த்திக்கும் பரிவாரத்திற் கோயிலுண்டு. சூரியமூர்த்தியில் அபிமானமுற்ற யாரோ ஒரிசா நாட்டிற் சூரியனுக்கே, எட்டுச்சில்லுத் தேர் வடிவில் பிரமாண்டமான கருங்கற் சிற்பக் கோயில் எழுப்பியிருக்கிறார்கள். அதுவுஞ்சிவாலயமே தான். இப்படியாக வெவ்வேறு மூர்த்திகளின் பேரின் பேரில் அமைந்த ஆலயங்களில் நடைபெறும் பூசை வழிகாடுகளும் யதார்த்தத்திற் சிவாலய. பூசையும் சிவ வழிபாடுமேதான்.

இ∴திருக்க, வழிபாட்டிலக்கணமும் இலட்சியமும் அறுதியான ஆன்ம விமோசனம் என்ற சைவ இலக்கில் தரிக்கமுடியாது அதிலும்பார்க்க லௌகிக சுகப்பேறு, சுவர்க்கப்பேறு முதலிய இஷ்ட சித்திப்பேறுகளே அத்தியாவசியம் என வேட்கை யுற்றவர்கள் சிலர் தம் அபிலாசைப்படி அம்மனாகிய சக்திக்குச் சிவனிலும் பார்க்க முதன்மை கொடுத்தும் தம் இஷ்ட சித்திப் பேறுகளுக்குதவும் குறுக்குவழித் தந்திரங்களான யந்திர மந்திரக் கிரியா விநோதங்களைத் தழுவியும் சாக்தர் என ஒரு பிரிவினராயினர். அவ்வாறே சிவனைப் பொருள் செய்யாமை மட்டுமன்றி அவர் வழிபாட்டு முறையையே நிராகரித்துவிட்டு, விஷ்ணுவை முழுமுதல் தெய்வமாகக் கொண்டு தம்மில் தாம் பிரிந்து வைஷ்ணவந் தோற்றினர் சிலர். தங்கள் நிலையை யதார்த்தப்படுத்திக் கொள்ளுதற்கான ஆகம நூல்களையும் இவர்கள் தாமாக ஏற்படுத்திக் கொண்டு அவற்றின் தொன்மையை நிரூபிக்குஞ் சில பல ஏதுக்களையும் தயார் செய்து வைத்துக்கொண்டனர். இந் நிலைமைகளை அவதானித்த ஆய்வியலாளர்கள் சைவம் போல இவையும் இயல்பான அநாதிச் சமயங்களென்று கொண்டு இவையெல்லாவற்றையும் உள்ளடக்கும் பெயரொன்றை நாடினர். மேற்றிசை நாட்டாரான பாரசீகர் இந்தியாவில் முதலில் சிந்து நதிக்கு இப்பாற்பட்ட சமூக கலாசார நிலைமைகளுக்குத் தம் மொழியில் இட்டுவழங்கி பின் பிற தேசத்தவர்கள் எல்லாரும் வழங்கத் தொடங்கிவிட்ட இந்து என்ற பெயர் அவர்களுக்குக் கைகொடுப்பதாயிற்று. அதிலிருந்து தோன்றிய வழக்கமே இந்து சமய வழக்காகும்.

இந்நாளில் உலகின் பலபகுதிகளிலும் கிடைத்து வரும் அகழ்வாராய்ச்சிச் சான்றுகளின்படி சைவம் அகில உலக சமயமாயிருந்தமை நிரூபிக்கப்படுகிறது. அதிலும் பார்க்க வலுமிகு அத்தாட்சிச்சான்றுகள் சைவம் அகில இந்திய சமயமாயிருந்தமைக்கும் உளவாம். அந் நோக்கில் மேற்கண்ட விளக்கத்திற் பொருந்தாமை ஏதும் இருத்தல் இயலாதாகும். தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.- திருவாசகம். இதன் பிரகாரம் அகில இந்தியாவில் எந்நாடுகளும் மதம் வேறுபட்டுப் போயும் தென்னாடு சைவமுடையதாகவே இருந்து வருதல் கண்கூடு.

அ∴ திருக்க, பிற நாட்டார் தம் வழக்கத் தேவைகளுக்காக இட்டமைத்துக்கொண்ட இந்து சமயம் என்ற பெயர் சைவர் வாழும் நம்நாட்டு வழக்கத்திற்கு ஏற்புடைத்தாமாறு இல்லை. சைவத்தின் உண்மை இயல்பைப் பிரதிபலிக்கும் தன்மை அச்சொல்லுக்கு இல்லவே இல்லை. அதனால் அச்சொல் வழக்குப் பிரபல்யமான பின் தோன்றிய சைவ நூல்களில் அது இடம்பெறவில்லை. பண்டிதமணி சி.க இறுதியாக உள்ள சைவச் சான்றோர் வாக்கில் என்றேனும் எங்கேனும் அது இடம் பெற்றதில்லை. 1906 இல் சேர்.பொன். இராமநாதன் அமெரிக்காவுக்குப் பயணஞ் செய்த கப்பலில் நிகழ்ந்த சம்பாஷணை யொன்று அது சம்பந்தமான நூலிலுள்ளது.

*ஒரு அமெரிக்கர்:* ஐயா உங்கள் சமயம் இந்து சமயமா ?

*இராமநாதன்:* அதுவா நாங்கள் சிவனை வழிபடுகிறவர்கள். எங்கள் சமயம் சைவம். பிற நாட்டார் எங்கள் சமயத்தை இந்து சமயம் என்கிறார்களேயன்றி நாங்கள் இந்து சமயத்தவர்களல்லர். அவ்வழக்கை நாங்கள் ஏற்கவில்லை.

# சைவசித்தாந்தம்

**செந்தமிழ்க்கும் சிவநெறிக்கும் மெய்கண்டாரின் பங்களிப்புப்போல முன்னும் எவரும் செய்திலர், பின்னும் எவரும் செய்திலர். இதோ சான்றாதாரங்கள்.**

**ஞானப்பிரகாசசிவம் மெய்கண்டார் ஆதீனம்.**

வேதம், உபநிடதம் எமது மூலாதார நூல்கள். வேத அந்தம் உபநிடதம். உபநிடதங்கள் பல. அவற்றின் கருத்துக்களிடையே ஒற்றுமையைக் காட்ட எழுந்தது வேதாந்த சூத்திரம். இது பிரமசூத்திரம் எனவும் கூறப்படும். வேத வேதாந்தத்திலேயுள்ள ஒரு முக்கியமான சொல் அத்வைதம். இது அத்துவிதம் எனவும் சொல்லப்படுகின்றது. துவைதம் இரண்டு. அத்துவிதம் ஒன்றா, இரண்டா என்பது பெரும் விவாதத்திற்கு உரியதாகும். பிரமசூத்திரத்திற்கு உரை கண்ட சங்கரர், இராமானுசர், மத்துவர் முதலியோர் அத்தவிதம் என்பதற்கு ஒன்று எனவும் இரண்டு எனவும் ஒன்றும் இரண்டும் எனவும் ஒருவர்க்கொருவர் முரணாக உரைவகுத்துள்ளனர். இதனால் சமய ஒற்றுமையை புகட்ட வந்த வேதாந்த சூத்திரமே வேற்றுமையை ஏற்படுத்துவதாயிற்று. பல்வேறு வேதாந்தப் பிரிவுகள், பலசமயப் பிரிவுகள் ஏற்படலாயின. இத்தகைய சூழ்நிலையில் சமயகுரவர் வழிவந்த சைவ சமயமும் பாதிப்புக்குள்ளானது. "ஒன்றாய் வேறாய் உடனானான்" என்னும் சைவ சமய அத்துவித நிலை கூட ஆட்டங்காணலாயிற்று.

இறைவனுக்கும் ஆன்மாவுக்குள்ள தொடர்பு அத்துவிதமானது. இறைவன் எனத்தனிப்பொருள் ஒன்று உண்டு. உயிர்கள் பல உள. உலகமும் வேறு உண்டு என்னும் சைவ சமய முப்பொருள் உண்மையைத் தருக்கவிஞ்ஞான ஆய்வுமுறைப்படி நிறுவியவர் மெய்கண்டதேவராவார். சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரத்தையும் 39 அதிகரணமாக்கி ஒவ்வொரு அதிகரணத்திற்கும் மேற்கோள், ஏது, உதாரணம் என்னும் எடுத்துக காட்டுகளை அருளியுள்ளார். சூத்திரத்திற்கு இவ்வாறு ஓர் உரை வகுத்தவர் தமிழிலே மெய்கண்டார் தவிர வேறுயாருமிலர். வடமொழிப் பிரமசூத்திரத்திற்கு இவ்வாறாய உரை கைடகர் செய்தார். இதனால் வடமொழியும் வேதாந்த சாத்திரமும் சிறப்புப் பெற்றன.

தமிழிலே தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட பல இலக்கண நூல்கள் உள. அவையாவும் சூத்திர யாப்பினாலே செய்யப் பட்டுள்ளன. ஆனால் அதிகரணமாக வகுத்து மேற்கோள் ஏது காட்டி உரை வகுக்கப்படவில்லை. மெய்கண்டதேவரே வேதாந்தத் தெளிவாகிய சைவசித்தாந்த முதல்நூலாகிய சிவஞான போதத்திற்கு மேற்காட்டியவாறு உரைவகுத் தருளினார்.

முதலில் அதிகரணம் என்பது என்னவென அறிதல் வேண்டும். சூத்திரத்தின் ஒரு கூறு-பகுதி அதிகரணம் எனப்படும். அதிகரணம் ஒவ்வொன்றும் பின்வரும் ஐந்து அம்சங்களை உடையதாகும். அவையாவன -

1. தன்னாற் கூறப்படும் பொருள்
2. ஐயப்பாடு
3. பிறர் கூறும் பக்கம்
4. மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு.
5. இயைபு எனப்படும் உதாரணம்.

மேற்கூறிய ஐந்தினையும் உள்ளடக்கியதே அதிகரணம். சிவஞானபோதம் முதற்சூத்திர மூன்றாம் அதிகரணம் "அந்தம் ஆதி" இதில்

1. தன்னாற் கூறப்படும் பொருள் .- சங்காரக் காரணன் ஆகிய கடவுளே முதற் கடவுள். பிறர் முத்தொழிற்படுவர்.
2. ஐயப்பாடு .- முதற் கடவுள் ஏகனோ? அனேகனோ?
3. பிறர் கூறும் பக்கம் .- தேர் முதலியன பலர் கூடிச் செல்வது போல உலகத்திற்கும் முதற் கடவுளர் பலர் உளர்.
4. மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு .- தேர் முதலியன பலராற் செய்யப்படினும் யாரோ ஒருவரின் ஏவலின்படியே. செய்யப்படுவதுபோல உலகிற்கு முதற்கடவுள் .சங்கார கர்த்தாவாகிய சிவனே.
5. இயைபு .- :ஒன்றறு அலா ஒன்றால் உளது ஆகி . . . என்னும் வெண்பா. அதன் பொருள்: உலகத்தொகுதி ஒப்பற்ற பரம்பெருளாலே தோற்றுவிக்கப் பட்டு, நிலைபெற்று, ஈற்றில் அந்தப் பொருளிலே ஒடுங்குதலால், அவ்வாறு எல்லா வற்றையும் தன்னுள்ளே ஒடுக்கும் சங்காரக் கடவுள் ஒருவனே உலகிற்கு முதற் கடவுள். :சங்காரக் கடவுள் எல்லாவற்றையும் தம்முள்ளே ஒடுக்குவதனால் "ஒடுங்கி" என சிவஞானபோத முதற் சூத்திரத்திலே கூறுவதும் கவனிக்கத் தக்கது. : கண்ணாற் காணப்படுகின்ற உலகத்தைக்

கொண்டு கண்ணால் நேரே காணப்படாத இறைவன் உளன் என்பதை அனுமானத்தால் நிறுவுவதே அனுமானப் பிரமாணம் எனப்படும். இதனை கருதல் அளவை எனவும் கூறுவர். அனுமானப் பிரமாணத்திலே ஐந்து அம்சங்கள் கட்டாயம் இடம்பெற்றிருக்கும். அவையே மேலே கூறிய "தன்னாற் கூறப்படும் பொருள்" முதலிய ஐந்துமாம்.

"அந்தம் ஆதி" என்னும் சூத்திர அதிகரணமே தன்னாற் கூறப்படும் பொருள். :அதாவது அந்தத்தை - சங்காரத்தைச் செய்யுங் கடவுளே ஆதிக்கடவுள் - முதற்கடவுள். பிறர் அல்லர்.: இனி சங்காரமே முதல் என்றது என மேற்கோளாக மெய்கண்டார் உரை விளக்கஞ் செய்து பின்னர் பின்வரும் ஏதுவைக் காட்டுகின்றார்.

ஏது .- சுட்டு உணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழி அல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

மேற்காட்டியுள்ள மேற்கோளும் ஏதுவும் மெய்கண்டார் அருளியவை. வசனத்தால் ஆனவை. ஆனால் எளிதிலே விளங்கவில்லை! எனவே உரையாசிரியர்கள் உரைக்கு உரை எழுதினார்கள். அவர்களின் உரைக்கு உரை கூட இன்றைய நிலையில் எளிதில் விளங்குமாறில்லையே!

மேற்கோள் ஏது இரண்டையும் பின்வருமாறு ஒரே வசனமாக்கினால் ஓரளவு புரியும். "சுட்டு உணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழி அல்லது சுதந்திரமின்றி நிற்றலான் சங்காரமே முதல்."

சங்காரமே முதல் - சங்காரக் கடவுளே முதற்கடவுள் ஏன் எனில் .- சுட்டி உணரப்படுகின்ற இவ்வுலகப் பொருள் சுட்டி உணரப்படாது சங்காரம் செய்கின்ற கடவுளின் வழியிலே தோன்றி, நின்று, சங்காரக் கடவுளினாலேயே ஒடுக்கப்படுவதனால் எல்லாவற்றையும் தம்முள்ளே ஒடுக்குகின்ற சங்காரக் கடவுளே முதற் கடவுளாவர். :மும்மூர்த்தியில் முதல்வர் சிவபெருமானே.: மெய்கண்டார் அதிகரணத்திற்குரிய ஐந்து அம்சங்களையும் மூன்றாகச் சுருக்கி முறையே மேற்கோள், ஏது, உதாரணமாக ஆக்கி விளக்கந் தந்துள்ளார்.

மேற்கூறிய ஐந்து அம்சங்களும் அனுமானப் பிரமாணத்திற்குரியவை. அதாவது அளவையியல் எனப்படும் தர்க்க சாத்திரத்திற்கே உரியவை. முறையாகத் தர்க்க சாத்திரம் கற்றார்க்கே அன்றி மற்றோர்க்கு எளிதிலே விளங்கமுடியாதவை. இதனாலேயே சிவஞான போதத்திற்கு சிற்றுரை, பேருரை வகுத்த சிவஞான முனிவர் தர்க்க சங்கிரகம் - அன்னம்பட்டீயத்தைத் தமிழிலே மொழி பெயர்த்தார். அதனை முதன் முதலில் அச்சு வாகனமேற்றிய பெருமை நல்லை நகர் நாவலர் பெருமானுக்கே உரியதாகும். நாவலர் பெருமானின் நற்செயலைத் திருவாவடு துறை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வாயாரப் போற்றலானார். தெல்லிப்பளைச் சிவானந்தையரின் மொழிபெயர்ப்பு பின்னாளில் வெளிவந்துள்ளது. இவை யாவற்றையும் கற்பார் இல்லாத இக்காலத்திலே சிவஞானபோதம் எளிதிலே கற்க வல்லதோ? திருவருள் துணைபுரிந்தால் கல்லாமலே கற்க வழி பிறக்கும். திருவருள் வேறு, திரோதானம் வேறு.

இனி, மெய்கண்டாரின் சிவஞானபோத உரைத்திறனை உள்ளவாறு அறிய வேண்டுமாயின் ஓரளவாவது தருக்க சாத்திர அறிவு வேண்டும். அதற்குத் துணையாகச் சித்தியார் அளவையியலும் அதன் உரைகளும் உதவவல்லன. "அளவை .- காண்டல், கருதல், உரை, அபாவம், பொருள், ஒப்பு ஆறு என்பர். அளவை மேலும் ஒழிபு, உண்மை, ஐதிகத்தோடு இயல்பு என நான்கு அளவை காண்பர். அவையிற்றின் மேலும் அறைவர். அவை எல்லாம்

அளவை .- காண்டல், கருதல், உரை என்று இம்மூன்றில் அடங்கிடும். இது சிவஞான சித்தியார் அளவையியலின் முதற்பா.

1. கண்ணாற் காணல் - காண்டல் அளவை. இது பிரத்தியட்சப் பிரமாணம் எனப்படும்.

2. கருதல் அளவை என்பது கண்ணாற் காண்கின்ற புகையை ஏதுவாக:காரணமாக:க் கொண்டு காணாத நெருப்பினை அனுமானித்து அறிதல். இது அனுமானப் பிரமாணம் எனப்படும். :காரியம் புகை, காரணம் நெருப்பு:.

3. உரை அளவை - சப்தப் பிரமாணம் எனப்படும். வேத வாக்கியம் முதலியன இதற்கு உதாரணம். மேற்கூறிய சங்காரக் கடவுளே முழுமுதற்கடவுள் பிரமா, விட்டுணு முதலிய படைத்தல், காத்தற் கடவுளர்கள் முழுமுதல்வர் அல்லர் என்பதை அனுமானப் பிரமாணம் மூலம் மெய்கண்டார் நிறுவியுள்ளார். கணித விஞ்ஞான விளக்கமாகும் சரியான விளக்கம் பெறுவதற்கு நாம் தர்க்க சாத்திரம் என்னும் அளவையியலில் போதிய பாண்டித்தியம் பெற்ற தருக்க வாதியாக

இருத்தல் வேண்டும். இது எல்லாரக்கும் எளிதான தன்றே! ஓரளவு எளிதாக அனுமான அளவை பற்றிப் பொதுவாக அறிந்திருத்தல் வேண்டும். கிழக்குத் திக்கில் கருமேகக் கூட்டத்தையும் இடிமின்னலையும் கண்டதும் மழை அங்கே உண்டு என உணருகி றோம் அல்லவா? இது அனுமான அளவை. ஒருவனுக்கு தந்தை தாய் இருவருமில்லை. அவர்களை அவன் கண்ணாற் காணவேயில்லை. பிறர் அவனின் தந்தை, தாய் பெயர்களைக் கூற அவன் கேட்கின்றான். தனக்கும் தந்தை தாய் இருந்தனர் என்பதை அனுமானத்தால் அறிகின்றான் அல்லவா? இது போல அனுமான அளவை நம் வாழ்க்கையிலே பலவாறு பயன்படுகின்றது. இறைவன் ஒருவன் உளன் என்பதையும் கண்ணாற் காண்கின்ற பிரபஞ்சத்தைக் கொண்டு அதைப் படைத்துக் காத்து ஒடுக்கும் கடவுளாகச் சிவப்பரம்பெருள் உண்டு என மெய்கண்டார் நிறுவுகின்றார். கண்ணாற் காணும் குடத்தைக் கொண்டு கண்ணாற் காணாமலே அதைச் செய்தவன் ஒரு குயவன் உளன் என அறிவது போன்றதே சிவஞான போத விளக்கமாகும். 39 மேற்கோள்களும் 39 ஏதுக்களும் உதாரண வெண்பாக்களும் தருக்க சாத்திர அனுமானப் பிரமாணத்தின்படி மெய்கண்டாரின் சிவஞானபோத உரையிலே இடம்பெற்றுள்ளன. எந்தத் தமிழ் நூலும் இவ்வாறு அமையவில்லை. 12 சூத்திரமே எளிதிலே விளங்காத நிலையில் அதிகரணங்களை நினைவுகூர்ந்து அவற்றிற்குரிய மேற்கோள் - ஏது - எடுத்துக்காட்டுகளை விளங்கிக் கொள்ளல் எல்லோர்க்கும் எளிதிலே கைவரத்தக்கதன்று. ஆனால் சிவஞானபோதத்தை எளிதிலே விளங்கிக்கொள்ள சிவஞானசித்தியார் நல்லதோர் வழியைக் காட்டுகின்றது எனவே நாம் சிவஞானசித்தியாரின் துணையுடன் சிவஞானபோதத்தினை முதலில் விளங்கிக் கொள்வோமாக.

சிவஞானபோதம்

1. பிரமாணவியல
2. இலக்கணவியல்
3. சாதனவியல்
4. பயனியல்

என நான்கு பிரிவுகளையுடையது. ஒவ்வொன்றிலும் மூன்று சூத்திரங்கள். முதல் ஆறும் பொது அதிகாரம் எனப்படும். பின் ஆறும் உண்மை அதிகாரம் அல்லது சிறப்பதிகாரம் எனப்படும். இதே பகுப்பு சிவஞானசித்தியார் சுபக்கத்திலும் உண்டு என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

சிவஞானசித்தியார் சிவஞான போதம் போலச் சூத்திர யாப்பினால் ஆக்கப் படவில்லை. ஆசிரிய விருத்தத்தால் ஆக்கப்பட்டதே சித்தியார். சிவஞானசித்தியாரின் விருத்தப்பாக்கள் ஓசைநயமுள்ள இனிய பாடல்கள். இனிமையுடன் எளிமையுமுடையவை. சித்தியார்க்குப் பல உரைகள் உள. அவற்றிற் சில வடமொழிச் சொற்களையே பெரிதும் கொண்டுள்ளன. இன்றைய நிலையில் வடமொழிக் கல்வி கற்றோர் மிகச்சிலரே. எனவே பலர்க்கு அவ்வுரைகள் பயன்படா. திருவிளங்க தேசிகர் உரை இந்நூற்றாண்டுக்குரிய உரை. உரையாசிரியர்களின் உரையைவிடச் சித்தியார்ப் பாடல்கள் எளிதிலே புலப்படுத்தும் தன்மையன. உதாரணமாக பின்வரும் பாடலைக் காண்க.

**சிவன் அரு உருவும் அல்லன், சித்தினோடு அசித்தும் அல்லன்,**
**பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்,**
**தவமுதல் யோக போகம் தரிப்பவன் அல்லன், தானே**
**இவை பெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே.**

"பார் விரித்த நூல் எல்லாம் பார்த்த அறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்" என்பர் தருமை ஆதீனத்தாபகர் ஆதிகுருஞானசம்பந்தசுவாமிகள்.

தாயுமானவர், "பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தமாக உண்மை சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவது எந்நாளோ?" என்பர்.

"சிவனுக்கு மேல் தெய்வமில்லை : சிவஞானசித்திக்கு மேல் சாத்திரமில்லை" என்பது முதுமொழி. எனினும் சிவஞானபோதத்திற்கே தமிழில் மாபாடியம் சிவஞானமுனிவரால் செய்யப் பெற்றுள்ளதை மறத்தலாகாது. சித்தியார் இலக்கியக் கலைநூல். சிவஞானபோதம் விஞ்ஞான கணிதநூல்.

# சாக்கிய நாயனார்

சிவ. சண்முகவடிவேல்

சாக்கியநாயனார் திருச்சங்க மங்கைப் பதியில் அவதரித்தார் அவர் தாளாண்மை மிக்கு வாழ்கின்ற வேளாளர் குலத்தவர். சாக்கியநாயனார் பதிப்பொருள் உண்மையை அறிவில் அறிந்தார். உள்ளத்தில் உணர்ந்தார். மானுடத்தவரில் அன்புடையராயினார், எல்லா உயிர்களிடத்தும் அருளுடையவரானார்.

இறப்பையும் பிறப்பையும் எண்ணிப் பார்த்தார். அவருக்கு அன்ன விசாரம் நீங்கி ஆன்ம விசாரம் ஏற்பட்டது. பிறவாமையாகிய பேரின்பப் பேறு பெறும் வழி யாது? என்று பெரிதும் விசனப்பட்டார்.

**சேவடி படரும் செம்மல் உள்ளமொடு நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும் செலவினை** மேற்கொண்டார். அழகிய காஞ்சி நகரை வந்தடைந்தார்.

காஞ்சிப் பதியில் நல்ஞானம் பெறுவதற்கு நல்வழி யாது? என்று பலவழிகளையும் நாடுவார். முடிவில் சாக்கியர்களுடைய புத்த தருமங்களின் நெறி முறைகளை அறிந்தார். அதில் நிலையிலாப் பிறப்பினை நீக்கும் உண்மை நெறியை ஆராய்ந்தார். சாக்கிய சமயத்தவர்களுடைய அரிய சாத்திர நூல்களை நுணுகிக் கற்றார். அந்த முடிபுகளும், ஏனைய புறச் சமயங்கள் சார்பாகக் கூறும் முடிபுகளும் உண்மை அல்ல என்பதைச் சாக்கிய நாயனார், தெளிந்தார்.

சாக்கிய நாயனாருக்குச் சிவபெருமானுடைய திருவருள் வந்து கைகூடப் பெற்றது. அவர் அழிவில்லாத சிவநன்னெறியே மெய்ப்பொருளாவது என்ற உண்மையைத் திடமாகத் தம்மனத்தில் உறுதிப்படுத்திக் கொண்டார்.

செய்யப்படும் வினை, செய்பவனாகிய கருத்தா, அதன் பயன், பயனைச் சேர்த்துவைப்பவன் -- என்ற உண்மைப் பொருள் நான்காகும். இந்தத் தத்துவ உண்மை சிவநெறிக்கே அல்லாமல் ஏனைய சமயங்கட்கு இல்லை என்ற உண்மையை அவன் அருளாலே அறிந்துகொண்டார் சாக்கிய நாயனார்.

சேக்கிழார் பெருமானின் தெய்வத் தமிழ் அக்கருத்தைப் பின்வரும் சொற் கோவிலாகத் தரும்.

**செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானு**
**மெய்வகையா னான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே**
**இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென**
**உய்வகையாற் பொருள்சிவ னென்றருளாலே யுணர்ந்தறிந்தார்**

*சாக்கியநாயனார் புராணம்-5*

ஒருவன் எந்த நிலையிலும் நிற்கலாம். எந்தக் கோலத்தையும் கொள்ளலாம். சிவபெருமானுடைய திருவடி மறவாமையைத் துணிபொருளாகவும் கொள்ள வேண்டும். சாக்கியநாயனார் அந்நெறி ஒழுகுவராதலின் தாம் கொண்ட சாக்கிய வேடத்தைத் தள்ளவில்லை. தூய சிவலிங்கம் தன்னைத் தினைத்தனைப் பொழுதும் நினைத்தலையே மனங் கொள்வார்.

**எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலும்**
**மன்னியசீர்ச் சங்கரன்றாண் மறவாமை பொருளென்றே**
**துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்**
**தன்னைமிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார்**

*சாக்கியநாயார் புராணம் - 6*

என்பது அருண்மொழித்தேவர் திருமொழி.

சிவபெருமானுடைய அருவத் திருமேனிக்கும் உருவத் திருமேனிக்கும் உள்ளீடாக ஒளிர்வது சிவலிங்கத் திருமேனியாகும். அது, நாடி நாரணன் நான்முகத் தேடித் தேடொணாத போது ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதிப் பிழம்பாகத் தோன்றிய உண்மையைச் சாக்கிய நாயனார் தெளிந்து கொண்டார்.

நாளும் சிவலிங்கப்பெருமானைக் கண்டு தொழ விரும்பினார். அதன் பின்னரே உணவு உண்பதை நியமமாக்கிக் கொண்டார்.

வெளியிடத்திற் சிவலிங்கத்தைக் கண்டார். மனம் பதைபதைத்தது. பக்கத்தில் கல் ஒன்று கிடந்தது. அவரையும் அறியாமல் கை அந்தக் கல்லை எடுத்தது. சிவலிங்கத்தின் மீது வீசி எறிந்தது. மனம் மகிழ்ச்சியடைந்தது.

சாக்கிய நாயனார் மற்றைய நாள் தமது நியமத்தை நிறைவேற்றச் சென்றார். இறைவரது அருவுருவத் திருமேனியின் மேல் தாம் முன்னை நாள் கல் எறிந்த திருக்குறிப்பினை நின்று உணர்வார். இத்தொண்டை எனக்கு அப்போது நிகழ்வித்தது இறைவரது திருவருளேயாம் என அறிந்தார். தாம் செய்யத்தக்க திருத்தொண்டு அதுவேயாக உறுதிபூண்டார். நாளுஞ் சிவலிங்கத் திருமேனிக்குக் கல் எறிந்த பின் உணவு கொள்வது சாக்கிய நாயனாருடைய சிவத் தொண்டாயிற்று.

ஒரு நாள் சாக்கிய நாயனார் தமது சிவப்பணியினை மறந்து உணவு கொள்ளத் தொடங்கினார். எங்கள் பெருமானைக் கல் எறிந்து வழிபட மறந்து விட்டேனே என்ற நினைப்புத் திடீரென வருதலும் எழுந்து ஓடிச்சென்றார். மேன்மேலும் வளர்ந்து ஓங்கும் அன்போடு மிக விரைந்து ஓடினார். சிவலிங்கப் பெருமான் முன் வந்து நின்றார்.

அங்கு கிடந்த ஒரு கல்லை எடுத்தார். அவர் குறிக்கோள் கைகூட எறிந்தார். கண்ணுதலார் கருணை வெள்ளம் பொழிந்தார். திருவருள் திருநோக்குச் சாக்கிய நாயனார் மீது விழுந்தது.

சிவபெருமான் காமாட்சி அம்பாளோடும் உயர்ந்த ஆகாயத்தில் திருத்தொண்டருக்குத் திருக்காட்சி கொடுத்தார்.

சாக்கிய நாயனார் தரிசித்துச் சேவித்தார். இறைவன் இறைவியோடும் இளமையான இடபத்தின் மேலாக வெளிப்பட்ட ஒப்பற்ற திருவருட்செயலால் சாக்கிய நாயனார் விழுமிய பெறலரும் பரிசில் பெற்றார்.

சாக்கிய நாயனார் மேலான சிவலோகத்தை அடைந்தார். பழைய அடிமை அன்பில் திளைத்தார். அம்மை அப்பர் மறைந்தருளினார்.

திருவாசகச் சிந்தனை

# திருவெம்பாவை

பண்டிதர் சி அப்புத்துரை.

சைவநீதி என்னும் புனிதமான பெயரைத்தாங்கி வரும் மாத இதழில், அந்த அந்த மாதங்களிற் கொள்ளப்படும் விரதங்கள் பற்றிய செய்திகளை, மாத மகத்துவம் எனும் தலைப்பில் வருங் கட்டுரைகளிற் பார்க்கின்றோம். இந்த வரிசையில் மார்கழி மாதச் சிறப்பு விரதமாகத் **திருவெம்பாவைக் கால மார்கழி நோன்பு** குறிப்பிடப்படும். மார்கழித் திருவாதிரைக்கு முன் பத்தாவது நாளில் தொடங்கி மார்கழித் திருவாதிரையில் நிறைவுறுவதாக அவ்விரதம் அமையும். மார்கழி நீராடலும் இந்தக் காலத்திலேயே கொள்ளப்படும்.

**மாதர்கொண் மாத ரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்**
**ஆதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க ளெல்லாம்**
**மேதகு மனைக டோறும் அழைத்திருள் விடிவ தான**
**போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல் செய்வார்.**

என்னுந் திருவாதவூரடிகள் புராணச் செய்யுள் இக்கருத்தை உறுதி செய்கின்றது. மார்கழி நீராடல், மார்கழி முழுமையாக நிகழ்வதொன்று என்று கொள்ளப்படுவதும் ஒன்று.

அதிகாலையில் மார்கழி நீராடச்சென்ற கன்னியர்கள் பார்வதி தேவியை மணலில் உருவாக்கம் செய்து வழிபட்டனர். பார்வதிப் பாவையை வழிபட்டுக் கொள்ளப்பட்ட நோன்பு **பாவை நோன்பு** என்றாயிற்று. பாவை என்றது பார்வதியை. உயர்ந்த குணநலம் பொருந்திய கணவர் கிடைக்க வேண்டுமென வேண்டுதல் செய்து கன்னியர்கள் இந்த நோன்பை அனுட்டிப்பர். எனவே கன்னியர்கள் விரும்பி நோற்பதற்கு உகந்த நோன்பு இதுவென்பது புலனாகின்றது.

திருவெம்பாவை பற்றிய திருவாசகத் திருவுள்ளக்கிடை சக்தியை வியந்தது என்று அப்பகுதியின் உள்ளடக்கமான உயிர்ப்பொருள் எனக் குறிப்பிடுகின்றது. சக்தி என்றது பார்வதி தேவியாரை. பார்வதிதேவியைப் பாவை என முன்னர் கண்டோம். எனவே பார்வதி தேவியை வியந்த பாடல் பாவைப் பாட்டு என்று வழங்கியது.

திருவாசகம் திருச்சதகம் என்னும் பகுதி பற்றிய திருவுள்ளக்கிடை பக்தி வைராக்கிய விசித்திரம் என்கின்றது. அந்தப் பக்தி வைராக்கியத்தின் சிறப்பியல்பு நீத்தல் விண்ணப்பத்தில் பிரபஞ்ச வைராக்கியம் எனத் தெளிவு படுத்தப்படுகின்றது. அந்தப் பக்திக்கு உபகாரியாகும் உமைய ம்மையின் பெருஞ்செயல் சக்தியை வியந்த பகுதியாகிய திருவெம்பாவையிற் காட்டப்பட்டது.

அம்மையப்பனாகிய இறையை அடைவதற்கு அன்பு நெறிவழிச்செல்ல வேண்டும். அன்பு நெறி கைகூடவேண்டுமெனில் அன்னையின் திருவருள் நோக்கைப் பெறவேண்டும். அன்னை மூலம் அப்பனை அணுகுவதுதான் எளிதான முறைமை. சாதாரணமாக உலகியலில் யாம் பெற்ற அனுபவமும் இதுவே! அஃதே போன்று இங்கேயும் இறைவன் பேரன்பைப் பெறுவதற்கு தேவியாரின் திருவருட்பார்வை வேண்டும். எனவே சக்தியை வழிபட்டுச் சிவானந்தப் பேற்றினை அடைய வேண்டுமென்பது புல னாகின்றது. இதனை நன்கு தெரிந்து கொண்ட மணிவாசக சுவாமிகள் திருவாசகம் பிடித்த பத்து என்னும் பகுதியில் அம்மையே அப்பா என்று அம்மைக்கு முதலிடங் கொடுத்து விழிக்கின்றமையையும் பார்க்கின்றோம்.

திருவெம்பாவை என்னும் இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு பாடல் இறுதியிலும் எம்பாவாய் என்றிருக்கும் முடிவிடத்தைப் பார்க்கின்றோம். அது தெய்வீகத்தை உணர்த்தும் திரு என்னும் அடையைப் பெற்றுத் திருவெம்பாவை என்று நின்றது. திருவாசக உண்மை என்னுந் தலைப்பிலமைந்த பாடல்களுள் திருவெம்பாவை பற்றிக் குறிப்பிடுவதொரு செய்யுள்

**மலவிருளூற் றுறங்காமல் மன்னுபரி பாகரருள்**
**செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை.**

என்று குறிப்பிடுவது கொண்டு எமது சிந்தையிற் படவேண்டிய கருத்துக்கள் சில உண்டெனத் தெளியலாம். பக்குவமடைந்த ஆன்மாக்களே கன்னிப்பெண்களாகக் கருதப்பட்டன ரென்றும், இறைவன் தலைவனெனக் கொள்ளப்பட்டா னென்றும், மலப்பிணிப்புடனாகிக் கிடக்குமான்மாவின் நிலை துயிலுதலென்றும், அந்தப்பிணிப்பினின்றும் விடுபடச்செய்தல் துயிலெழுப்புதல் என்றும், பக்குவமடைந்த ஆன்மாக்கள் பக்குவமடையாத ஆன்மாக்களை நன்னெறிப்படுத்துதல் நீராட அழைத்தல் என்றும் உணரல் வேண்டும்.

பண்டைத் தமிழர் கலாச்சாரப்படி, ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலான பெண்கள் எட்டுப்பகுதியில் அடக்கப்பட்டனர். திருவெம்பாவை முதலெட்டுத் திருப்பாடல்களும், முன்னே காட்டிய பகுப்புள் மூத்தவரானோர் ஏனையோரை வரிசைக்கிரமமாக, எழுப்புவதாக அமைந்துளது. மூத்தவர்கள் முதலில் துயிலுணர்ந்து விடுவர். அவர்கள் தம்மோடொத்தவரையே முதலில்

எழுப்புவர். அதன் பின்னர் இருவருமாகவும், தொடர்ந்து, பின்னர் எழுப்பப்பட்டவர்களுடனுஞ் சேர்ந்து எழுப்புவர். ஈதேயெந் தோழி பரிசு என்ற குறிப்பு முதலாவது திருப் பாட லின் இறுதியிற் காணப்படுகின்றது. எழுப்பப் பட்டவர் எழுப்பியவர் இருவரும் ஒத்த வயதுடையவர் என்று இப்பகுதி தெரிவிக்கின்றது. பின்னே எழுப்பப்பட்டவர்கள் வரிசைக்கிரமமாக வயது குறைந்தவர்கள் என்பதும் புலனாகின்றது. ஒன்பதாவது திருப்பாடலில் எல்லோருமாகச் சேர்ந்து இறைவனைப் பாடிப் பரவி வேண்டுதல் செய்தமை கூறப்பட்டுளது.

சேர்ந்து கொண்ட கன்னியர்கள் அனுபவசாலிகளான பெண்களிடம், பாடுதற்குரிய செய்திகளை வினவுவதாகப் பத்தாவது திருப்பாடல் அமைந்துளது. பதினோராவது திருப்பாடலில் நீராடத் தொடங்குங் கன்னியர்கள் தமக்குக் காவல் வேண்டுகின்றனர். அதாவது, நாம் பிறவியில் இளைத்து விடாதபடி எம்மைக் காத்தருள் என்றபடி. நீராடும்போது இறைவன் புகழ் பாடுதலைப் பன்னிரண்டாவது, பதின்மூன்றாவது, பதினான்காவது, பதினைந்தாவது திருப்பாடல்கள் பேசுகின்றன. பதினாறாவது திருப்பாடல், திருவெம்பாவை விரத அனுட்டானத்தால் ஏற்புடைத்தாகக்கூடிய பயன்களுள் எல்லேருக்கும் பயனுடைத்தாகிய மழையை வேண்டிக் கன்னியர்கள் கூறியதாக அமைந்தது. நீராடும்போது ஒருத்தியை நோக்கி ஏனைய, கன்னியர்கள் இறைவன் அருளமுதத்தாற் கிடைக்கக்கூடிய பேரின்பப் பெருநுகர்வினை, இன்ப அருமைப் பாட்டினை, அறிய வைப்பதாக அமைந்தது பதினேழாவது திருப்பாடல். அருணன் இந்திரன் திசை அணுகியமையை நீராடும் வேளை ஒருத்திக்கு அறிவிப்பது போன்ற கருத்துடன் நிற்பது பதினெட்டாவது திருப்பாடல். இறைவனுக்கு தாம் செய்யக்கூடிய அன்புப்பணிகள் தடையின்றி இடம் பெறுவதற்கு இறைவன் துணை வேண்டுமென்பதைப் பத்தொன்பதாவது திருப்பாடல் அறிவுறுத்த இருபதாவது திருப்பாடல், பெண்கள் நீராடல் நிறைவானதும் தம்மைக் காத்தருளுமாறு இறைவனை வேண்டுவதாக அமைகின்றது. இறைவனைப் புகழ்ந்து வழிபட வாய்ப்பாயமைந்த மார்கழி நீராடலையும் வேண்டிக் கொள்வதாக அமைகின்றது.

**சக்தியை வியந்தது.**

திருவருட் சக்தியைப் புகழ்வதாக-போற்றுவதாக இப்பகுதி அமைந்துள்ளமை திருவாசகத் திருவுள்ளக்கிடையாற் புலனா கின்றது. முதலாவது திருப்பாடலில் மாதேவன் வார்கழல்கள் என்னுமிடத்து வார்கழல்கள் சக்தியைக் குறிப்பன.

இ∴தொரு உள்ளுறைக் குறிப்பு. சிவஞானபோத மாபாடிய உரையாற் பெறப்பட்டது. இரண்டாவது திருப்பாடலில் கூசு மலர்ப்பாதம், என்னும் பகுதி கொண்டும் ஆறாவது திருப்பாடலில், வான் வார்கழல் பாடி என்னும் பகுதியாலும் பன்னிரண்டாவது திருப்பாடலில் , உடையான் பொற்பாதம் ஏத்தி, என்பது கொண்டும், பதினான்காவது திருப்பாடலில் பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம்பாடி என்னும் பகுதியானும் பதினைந்தாவது திருப்பாடலில், ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள், என்பதனாலும், பதினேழாவது திருப்பாடலில், செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன், என்னும் பகுதியானும், பதினெட்டாவது திருப்பாடலில் நின்றான் கழல்பாடி, என்பதனாலும், இருபதாவது திருப்பாடலிற் பலவிடங்களில் காப்பு வேண்டித் திருவடியைப் புகழ்ந்திருப்பதனாலும் சக்தியை வியத்தலாகிய கருத்துப் பெறப்படுகின்றது.

மூன்றாவது திருப்பாடலில், அத்தன் ஆனந்தன், என்னுமிடத்து அன்னையுடனான அத்தன் எனக்கொண்டும், நான்காவது திருப்பாடலில், கண்ணுக்கினியான்னை, என்றதினால் இறைவனுக்குத் திருமேனி உண்டென்று கொண்டும், ஐந்தாவது திருப்பாடலில், ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான், என்னும் பகுதியானும், கோலமும் நம்மையாட் கொண்டருளி , என்பதில் கோலம் என்னுங் குறியீட்டானும், ஏழாவது திருப்பாடலில், தென்னா வென்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய், என்பது கொண்டும், எட்டாவது திருப்பாடலில் ஏழைபங் காளனையே பாடு, என்பதனாலும் ஒன்பதாவது திருப்பாடலில் இறைவன் முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகவும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாதல் சக்தியொடு கூடிய வழியல்லது நிகழாது என்பதனாலும், பத்தாவது திருப்பாடலில் பேதை யொருபால் திருமேனி யொன்றல்லன் என்பதனாலும், பதினோராவது திருப் பாடலில் சிறுமருங்குன் மையார் தடங்கண் மடந்தை மணவாளா என்பதனாலும், பதின் மூன்றாவது திருப்பாடலில் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு என்பது கொண்டும், பதினாறாவது திருப்பாடலில் உலகிற்கு மிகமிக வேண்டப்படுவதாய மழை வளத்திற்கு சக்தியின் அருட்பெருக்கை உவமையாக்கி இருத்தல் கொண்டும், பத்தொன்பதாவது திருப் பாடலில் தாயினும் இனிய பெருமானைத் தாய்மை நிலையில் வைத்து, எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க, என்று கோரும் விண்ணப்பங் கொண்டும் சக்தியை வியத்தல் புலப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தப் பதிகத்தின் முதலாவது செய்யுளில் முதலும் முடிபும் இல்லாத இறைவன் எனத் தொடங்கிய மணிவாசக சுவாமிகள் இறுதித் திருப்பாடலில் உலகத்திற்கு முதலாகவும் முடிவாகவும் இருக்கின்றான் என்கிறார்கள். தனக்கு முடிவும் முதலும் இல்லாதவனே உலகிற்கு முதலாகவும் முடிபாகவும் இருக்க முடியுமென்பது இதனாற் பெறப்படும்.

மாத மகத்துவம்

# திருவாதிரை நாள்

செ. நவநீதகுமார்

சிவ விரதங்களுள் திருவாதிரை விரதமும் ஒன்றாகும். இருபத்தேழு நட்சத்திரங்களுள் திரு என்று சிறப்பாகக் கூறப்படுபவை இரண்டு. ஆதிரை, ஓணம் என்ற இரு நட்சத்திரங்களுமே திருவாதிரை, திருவோணம் எனப்படும். திருவாதிரை சிவபெருமானுக் குரியது. திருவோணம் விஷ்ணுவிற் குரியது. சிவபெருமானை ஆதிரை நாயகன் என்றும் ஆதிரையான் என்றும் அழைப்பர்.

திருவாதிரை விரதம், சூரியபகவான் தனுர் ராசியில் சஞ்சரிக்குங் காலமாகிய மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று அனுட்டிப்பதாகும். விரதமனுட்டிப்பவர் திருவாதிரை யன்று அதிகாலையில் துயில்விட்டெழுந்து நித்திய கருமம் முடித்துச் சிவாலயத்திற்குச் செல்லவேண்டும். அங்கு சிவலிங்கப்பெருமானுக்கும், நடராஜப் பெருமானுக்கும் அபிஷேகம், பூஜை செய்வித்து நெய்விளக்கேற்றி வழிபடல் வேண்டும். அன்று பகல் நடராஜப் பெருமானைத் தியானித்து உபவாசம் இருந்து மறுநாட் காலை நித்திய கருமம் முடித்துச் சிவபூசை, வழிபாடியற்றி அடியாரோடும் பாரணை பண்ணுதல் வேண்டும். இவ்விரதம் தரிசிக்க முத்தியளிக்கும் தலமான சிதம்பரத்தில் அனுட்டிப்பது உத்தமமாகும்.

சிதம்பரத்திலே மார்கழித் திருவாதிரையை இறுதியாகக் கொண்டு முதற் பத்துத் தினங்கள் மகோற்சவம் நடைபெறும். திருவாதிரைக்கு முதல் நாள் இரதோற்சவம் நடைபெறும். அன்று இரவு நடராஜப் பெருமான் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருப்பார். அதிகாலை அபிஷேகம், அலங்காரம் என்பன நடைபெற்றுச் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் வீதியுலா வந்து தரிசனங் கொடுப்பார். இது ஆருத்திரா தரிசனம் எனப்படும். இத்தரிசனத்தைக் காண்பதற்குப் பல்லாயிரம் பக்தர்கள் இங்கு வந்து கூடுவர்.

வியாக்கிரபாதர், பதஞ்சலி, முனிவர், தேவர், கின்னரர், சித்தர், மருத்துவர், கங்கை முதலிய தீர்த்தங்கள், சமுத்திரங்கள் யாவும் ஆருத்திரா தரிசனத்திற்காக இங்கு கூடுவர். இவர்கள் கிரேதா யுகம், திரேதா யுகம், துவாபர யுகம் ஆகிய மூன்றிலும் சுயரூபத்தில் இருந்து பெருமானைத் தரிசிப்பர். இக்கலியுகத்தில் மானுடருக்குத் தெரியாவண்ணம் மறைந்திருந்து பெருமானைத் தரிசிப்பர்.

சிதம்பரத்தில் திருவாதிரை மகோற்சவ காலத்தில் தேர்த்திருவிழா அன்று தேர்ச்சில்லு சேற்றிற் புதைந்து தேர் ஓடாது தடைப்பட்டு நின்றது. ஓடாது நின்ற தேரை ஓடச் செய்வதற்குச் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடினார். பதின்மூன்று பாடல்களால் இறைவனைப் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்திப் பாடினார் சேந்தனார். தேர் தடையின்றி ஓடியது. ஒன்பதாந்திருமுறையில் உள்ள திருப்பல்லாண்டின் பன்னிரண்டாம் பாடலில் திருவாதிரை விழா பற்றிக் கூறியுள்ளார்.

**ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்**
**நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்**
**தேரார் வீதியிற் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து**
**பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.**

திருப்புகலூரிலே முருகநாயனார் மடத்திலே அடியவர்களோடு திருஞானசம்பந்தப் பிள்ளையார் வீற்றிருந்தார். சம்பந்தப்பிள்ளையாரைக் காணும் ஆவலால் அப்பரடிகள் முருகநாயனார் மடத்திற்கு வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கினர். சம்பந்தப் பிள்ளையார் அப்பரடிகளிடம் திருவாரூரிற் திருவாதிரை விழா எப்படி நடை பெற்றது ? என வினவினார்.

**முத்துவிதானம் மணிபொற்கவரி முறையாலே**
**பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே**
**வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்**
**அத்தன்ஆரூரில் ஆதிரைநாள் அதுவண்ணம்**

என்று அப்பரடிகள் பதிகம் பாடினார். சேந்தனார் தினமும் இறைவனுக்குத் திருவமுது செய்து பின் அவ்வமுதையே உண்ணும் வழக்கமுடையவர். ஒருமுறை பஞ்சம் ஏற்பட்டது. அன்று திருவாதிரை நாள். திருவமுதிற்கு உரிய பொருட்கள் கிடைக்காமையாற் கவலையுற்றார் சேந்தனார். மாவிலே களி கிண்டி இறைவனுக்கு நிவேதித்தார். இறைவனும் களியை மகிழ்வுடன் ஏற்றருளினார். இதனாற் திருவாதிரையன்று இறைவனுக்கு களி சிறப்பாக நிவேதிக்கப்படுகின்றது.

சுப்பிரமணியப்பெருமான் இவ்விரதத்தை அனுட்டித்து கைலாயபதியின் அனுக்கிரகம் பெற்று கைலையங்கிரியில் எழுந்தருளினார். வியாக்கிரபாத முனிவர் இவ்விரதத்தை நோற்றுத் தவவலிமை பெற்று, கண்ணனின் தீட்சா குருவான உபமன்யு முனிவரை மகனாகப் பெற்றார். மேலும் ஆனந்தத் தாண்டவமூர்த்தியாகிய நடராஜப்பெருமானின் திவ்விய நடனக் காட்சியைக் கண்குளிரத் தரிசித்துச் சீவன் முத்தரானார்.

பதஞ்சலி முனிவரும், கார்க்கோடகன் என்ற சர்ப்பமும் இவ்விரதத்தை அனுட்டித்துக் கூத்தப் பிரானின் திருநடனக் காட்சியைக் கண்டின்புற்று அதன் பயனாகப் பிறப்பு இறப்பு அற்ற முத்தி நிலை அடைந்தனர்.

விபுலர் என்ற வேதியர் திருவாதிரை விரதத்தை நோற்றுச் சிவபெருமானின் அனுக்கிரகம் பெற்று இவ்விரத பலத்தாற் பருவுடலுடனே திவ்விய விமானத்திலேறிக் கைலைக்குச் சென்றார். அங்கு இறைவனைச் சேவித்துப் பூவுலகிற்கு மீண்டார். பின் மனைவி மக்களோடும் சகல ஐஸ்வரியங்களுடன் வாழ்ந்து பின் சிவலோகப் பேறு பெற்றார்.

**ஊர்திரை வேலையுலாவும் உயர்மயிலைக்**
**கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதன்னில்**
**கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்.**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

# ஆராத்திரிகை

கர்ப்பூர ஆராத்திரிகமே விசேடமாம். வேறு பல திரவியங்களிருக்கவும், கற்பூரத்தையே விசேடமாகக் கொண்ட தென்னையெனிற் கூறுதும். கற்பூர வடிவம்போலவே ஆன்மாக்களும் வெண்ணிறமான சாத்துவிக குணாவடிவமுறல் வேண்டும் என்பதும்: கர்ப்பூரமானது, அக்கினி பற்றியவிடத்தே தன்வடிவமாக விளங்காது, அவ்வக்கினிச் சோதிமயமாய் எவ்வாறு விளங்கிநிற்குமோ அவ்வாறே ஆன்மாக்களும், சிவஞானாக்கினி பற்றியவிடத்தே பசுத்துவ நீங்கிச்

சிவத்துவ விளக்கமுற்று நிற்கும் என்பதும், பின்னர் அக் கர்ப்பூரம் யாதோர் பற்றுமில்லா தன் வடிவ முழுதுங் கரையப்பெற்று, வெளியாமாயத்திற் கலந்து, அவ்வாகாயத்தோடு எவ்வாறு அத்துவிதமாய் விளங்குமோ அவ்வாறே, இவ்வான்ம கூட்டங்களும், தம் தூல சூக்கும காரண சரீரங்கள் கரையப்பெற்று, எப்பற்றுங் கழன்று, சிதாகாசத்தோடு அத்துவிதமாய்ப் பேரின்பப் பெருவாழ்வடைவார்கள் என்பதும், குறித்துணர வைத்த உய்திக்கேதுவான நற்குறியேயாம். இங்கனம், கற்ரபூர ஆராத்திரிகத்தால் அத்துவிதமுத்தி உணரப்படுமாயின், இது போலவே நம் சைவசமயக் கிரியைகளெல்லாம் பக்குவம்

நோக்கி உண்மையறிய வைத்த உபாயக் குறிகள் என்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதினுணரக் கிடப்பன காண்க. இவ்வுண்மைகள் போதரவே,

**அக்கினிகர்ப் பூரத்தை யறவிழுங்கிக் கொணடாற்போன்**
**மக்கினம்பட் டுள்ளே மருவியிருந் தாண்டி** — பட்டணத்துப்பிள்ளையார்

**தீத்ணையாக் கர்ப்பூர தீபமென நான் கண்ட**
**சோதியுட னொன்றித் துரிசறுப்ப தெந்நாளோ.** — *தாயுமானசுவாமிகள்*

எனவும் கூறியருளினார்கள்.

நன்றி:

சிவசேஷத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கம்

# திருவாதவூரரும் நம்பியாரூரரும்.

முருக. வே. பரமநாதன்.

திருவாதவூரர் - மாணிக்கவாசக சுவாமிகள்.
நம்பியாரூரர் - சுந்தரர்.

திருநாவலூரில் அவதாரம் செய்தவர் நம்பியாரூரர். மாணிக்கவாசகர் திருவாதவூரிலே அவதாரம் செய்தவர். திருநாவலூரர், நம்பியாரூரர், ஆலாலசுந்தரர், வன்றொண்டர், தம்பிரான் தோழர் என்னும் திருநாமங்கள் சுந்தரருக்கு வழங்கியது போன்று, திருவாதவூரர், ஆளுடையடிகள், மணிமொழியார், மாணிக்கவாசகர், தென்னவன் பிரமராயன், பெருந்துறைப்பிள்ளை என்னுந் திருநாமங்கள் மாணிக்க வாசகருக்கு உண்டு. மணிமொழியார் அமாத்தியப் பிராமண குலத்திலே பிறந்து அரிமர்த்தன பாண்டியனின் முதன்மந்திரியாக இருந்தார். ஆதி சைவ அந்தண குலத்திற் தோன்றிய ஆரூரர் நரசிங்கமுனையர் என்னும் சிற்றரசனால் வளர்க்கப்பட்டார். பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்தார் சுந்தரர். வாதவூரர் முப்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார். சுந்தரர் பாடியது திருப்பாடல் எனப்பட்டு பிற்காலத்திற்றான் தேவார வரிசையிற் சேர்க்கப்பட்டது. பாடல்கள் மொத்தம் 1028. இதுவே ஏழாந்திருமுறை. மாணிக்கர் பாடியநூல்கள், திருவாசகம், திருக்கோவையார் என்னுமிரண்டுமாம். இரண்டிலும் 1056 திருப்பாடல்கள் உண்டு. திருக்கோவையார் அகத்திணை இலக்கியம் 400 துறைகள் கொண்டது. நமசிவாய எனத் தொடங்கிய வாசகம் ஊதியமே எனக் கோவையாரில் பூர்த்தியாகிறது.திருவாசகம் சிறந்த தோத்திரம். சுந்தரர் தேவாரம் சொற்றமிழ் மிக்கது.அவரது பேராண்மை மிடுக்கு பாடல்களிலே ஜொலிக்கிறது. சுந்தரர் காலம் கி பி 694 - 712 வரை. மாணிக்கவாசகர் காலம் பலவாறு பேசப்படுகின்றது. கி பி 9ம் நூற்றாண்டென்பர் சிலர். எது எவ்வாறாயினும் சுந்தரருடைய சில பாடல்களின் நோக்கும், மணிக்கருடைய சில பாடல்களின் நோக்கும் ஒன்றாயமைவதைக் காணலாம்.

உலகியலிலே விற்றல், வாங்கல், அடைவு, ஈடு, ஒற்றிவைத்தல் சமுதாயக் கொடுக்கல் வாங்கலாகும். இந்த அடிப்படையில் ஆளுடையடிகளின் பாடல் ஒன்று திருவாசகத்தில் அமைந்துள்ளது.

இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க நஞ்சமுதாய்
அருந்தின னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே.

*நீத்தல் விண்ணப்பம் 18.*

சர்வசுதந்திரனானவன் இறைவன். எல்லா உரிமையுமவனுக்குண்டு. எனவே என்னை யாண்டுகொள் - தனக்கே அடிமையாகக் கொள்ளுதல். விற்றுக்கொள்- பிறருக்கு விற்பனை செய்தல். ஒற்றிவை - பிறருக்கு அடமானம் வைத்தல். எனச் சுவாமிகள் பாடியுள்ளார். நீத்து விடாதே என்று இறைவனிடம் முறையிட்டுக் கொள்வது நீத்தல் விண்ணப்பமாகும். நல்லாய் எனக்கு மனு - விண்ணப்பம் ஒன்று தந்தருள் எனப் பட்டினத்தார் பாடியதும், பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் என அப்பரடிகள் அருளிப் போந்ததும் ஒப்பீடுசெய்யத்தக்கது. இதே பொருளமைவில் சுந்தரரின் பாடல் ஒன்றும் அமைந்துள்ளது.

விற்றுக் கொள்வீர் ஒற்றிஅல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக்கு அடிகேள் என்கண்கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே.

நான் உம்மிடம் ஒருவரால் அடகு வைக்கப்பட்டவன் அல்லேன். மனம் ஒப்பி அடிமைப்பட்டேன். ஆதலால் நீர் வேண்டும்போது என்னை விற்றுக்கொள்வதற்கு உரிமை உடையீர். யான் ஒரு குற்றமும் செய்தது இல்லை. இரக்கமின்றி என்னைக்குருடாக்கி விட்டீர். எம்பெருமானே! என் கண்ணை எதற்காக அபகரித்தீர்? இச்செயலால் நீரே பழிக்கு ஆளானீர். என்மீது இரங்கி என் வலக் கண்ணையும் தாராதொழிந்தால் :தந்தருளாது விடின்: நீரே வாழ்ந்தேபோம் நான் கெட்டாற் கெடுகிறேன். என்று உறைப்புடன் கேட்கிறார் சுந்தரர்.

இந்தப் பாணியில் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாழாங்கிருப்பீர் - நீர் வாழ்ந்து போதீரே என அப்பரும் பாடிப் போந்தமை படிப்போரின் உணர்வைத் தூண்டுகின்றன.

பெரியார்கள் சிறியவர் செய்த பிழையைப் பொறுப்பது கடமை. இ. தே போன்று பழவடியார் குற்றஞ் செயினும் குணமாக் கொள்ளல் பெருந்தன்மையாகும் என்பதனை அருள் மணிவாசகரும் அருட்செல்வர் சுந்தரரும் குறிப்பிடுகிறார்கள்.

குன்றே யனைய குற்றங்கள் குணமா மென்றே நீகொண்டால்
என்றான் கெட்ட திரங்கிடாய் எண்டோள் முக்கண் எம்மானே.

*திருவாசகம் குழைத்தபத்து 3*

குற்றம் செய்யினும் குணம் எனக்கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே.

*சுந்தரர் தேவாரம் 563.*

இவ்வண்ணம் உள்ளங் கவர் கள்வனாம் சிவன் மீதெழுந்த ஏழாந்திருமுறையிலும் எட்டாந் திருமுறையிலும் சிலபாடல்கள் பொருளமைதியில் ஒன்றாய் இருக்கின்றன. இது ஞானிகளின் ஒருமித்த கருத்தையே எமக்கு உணர்த்துகின்றது.

சிறுவர் பகுதி

# ஆணவம்

சோ.குமுதா.

அரசன் ஒருவன் தன் நாட்டை நல்ல முறையில் ஆட்சி புரிந்து வந்தான். அவன் ஆட்சியில் நாட்டு மக்கள் மகிழ்ச்சியொடு வாழ்ந்து வந்தனர். அதனால் அவன் புகழ் எங்கும் பரவியது.

ஒரு நாள் அந்த அரசன் தன் அமைச்சர்களுள் ஒருவனை அழைத்து என்னைப்போல் அறிவுள்ள அரசர்கள் யாராவது எங்காவது இருக்கின்றார்களா? நம் நாட்டைப் போல வளம் மிக்க நாடு எங்காவது உளதா? என்று பெருமையோடு கேட்டான். அதற்கு அமைச்சன், ***"நம் நாட்டைப் போன்ற வளம் மிக்க நாடு எங்குமே இல்லை என்றே கூறலாம். ஆனால் உங்கள் அறிவிலே ஒரு குறை உள்ளது'*** என்றான். ***"என்ன குறை கண்டு விட்டாய்? உடனே சொல"*** என்று கோபத்துடன் அரசன் கேட்டான்.

"அரசே உங்களுக்கு உலகைப் பற்றிய அறிவு முழுமையாக உண்டுதான். ஆனால் ஒன்று மட்டும் போதாது. அது இறைவன் பற்றிய அறிவை நீங்கள் அறிந்து கொள்ளாதது ஆகும். அதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் அறிவு முழுமையடையும்" என்றான் அமைச்சன்.

"இறையறிவை நான் யாரிடம் கற்றுக் கொள்வது?" என்று கேட்டான் அரசன். "நம் தலைநகரை அடுத்துள்ள மடத்தின் தலைவர் ஞானானந்தரே அதற்கு மிகவும் பொருத்தமானவர்" என்றான். "அப்படியானால் அவரை உடனே அரண்மனைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்" என்றான் அரசன். "அரசே! ஞானானந்தர் தம்மடத்தை விட்டு வெளியே எங்கும் வரமாட்டார். நீங்கள்தான் அங்கு சென்று அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றான் அமைச்சன். அரசனும் வேறுவழியின்றி மடத்திற்குச் சென்றான். வந்திருப்பவர் யார் என்பதை அறியாத ஞானானந்தர் "நீங்கள் யார்? எதற்காக இங்கே வந்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டான்.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் இந்நாட்டு மன்னன். நான் உங்களிடம் இறையறிவைப பெறுவதற்காக வந்திருக் கிறேன்.." என்று பெருமையுடன் பதில் சொன்னான் அரசன். உடனே துறவி, அப்படியா! உங்களுக்கு இப்பொழுது எம்மால் எதையுங் கற்றுத்தர முடியாது. *நான்* செத்த பிறகு இங்கே வாருங்கள், உங்களுக்கு இறையறிவைக் கற்றுத் தருவோம்." என்றார்.

இதைக் கேட்டதும் அரசனுக்குக் கடுங் கோபம் வந்தது. காவியுடை அணிந்திருப் பதனால் எதை வேண்டுமானாலும் சொல்லி விடுவதா? இந்தத்துறவி செத்தபிறகு இவரிடம் நான் எப்படி, கற்கமுடியும்? என்னனப் பைத்தியக காரன் என்று நினைத்து விட்டாரா? என்னை இவரிடம் அனுப்பிய அமைச்சனை என்ன செய்கிறேன் பார்?" என்று கூறிக்கொண்டு அரண்மனைக்கு வந்தார்.

அமைச்சனை அழைத்த அரசன், "அறிவில்லாத பைத்தியம் ஒன்றிடம் என்னை அறிவு பெறுவதற்காக அனுப்பிய உனக்கு மரணதண்டனை விதிக்கப்போகிறேன்." என்று கத்தினான். "அரசே் கோபப்படாதீர்கள் ஞானானந்தர் மிகப்பெரிய மகான். எதையும் ஆழ்ந்து புரிந்து கொள்ளக் கூடியதாகப் பேசக்கூடியவர். உங்களுக்கும் அவருக்கும் நிகழ்ந்த உரையாடலை ஒன்று விடாமல் கூறுங்கள். என்று பணிவாகக் கேட்டான்.

நடந்ததை எல்லாம் சொன்ன அரசன் "நான் செத்த பிறகு வா என்று கூறினார் அத்துறவி அதற்கு என்னபொருள்?" என்று கூச்சலிட்டான். "அரசே! நீங்கள் துறவியிடம் பேசும்போது அடிக்கடி நான் நான் என்று சொன்னீர்கள். அந்த நான் என்ற ஆணவம் இருக்கும் வரை யாருக்குமே இறை அறிவு கிடைக்காது. இதைத்தான் துறவி குறிப்பாக நான் செத்த பிறகு வா என்று சொன்னார்" என்று விளக்கினான், அமைச்சன்.

அது போலவே நீங்களும் நான் என்ற ஆணவத்தை அடக்கி இறை வழியில் நிற்கவேண்டும். இவ் ஆணவம் அடங்கினால் நிச்சயம் நீ மேன்மை பெறுகள். ஆகவே ஆணவத்தை அழித்து இறைவனிடம் உங்களை உங்கள் இதயத்தை பரிபூரணமாக அர்ப்பணிப்பர்.

# பயில்வோர் பயிற்சிக்கு - 6.

மாதினி.

1. தீனக்ஷா என்பதன் பொருள் யாது?
2. தீட்சை எத்தனை வகைப்படும்? அவை எவை?
3. விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும், இறைவன் கொடுக்கும் தீட்சை எது?
4. சிவபெருமான் ஞானசம்பந்தருக்கு அளித்த தீட்சை எது?
5. திருவடி தீட்சையை இறைவனிடம் பெற்ற நாயன்மார் யாவர்?
6. ஞானாசிரியர் திருநோக்கினால் மாணாக்கர் பாசத்தை அழிக்கும் தீட்சைக்குப் பெயர் என்ன?
7. மக்களுக்குத் தீட்சை அளிக்கும் ஆசாரியார் பெற்றிருக்க வேண்டிய தீட்சைகள் எவை?
8. சைவ சமய ஆசாரத்தை அனுட்டிப்பவர் முதலிற் பெறும் தீட்சை எது?
9. சமய தீட்சை இரண்டையும் பெற்றுக் கொண்டவர் முன் செய்த பிழைகளைப் போக்க இறுதியாகச் செய்து கொள்ளும் தீட்சை எது?
10. நிர்வாண தீட்சிதர் குருவாகுவதற்கு அதிகாரம் பெறும் பொருட்டு செய்து கொள்ளும் வினைமுறை யாது?
11. பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு இறைவன் காட்சி கொடுக்கும் வடிவம் எது?
12. குரு என்னும் பதத்தின் பொருள் யாது?
13. சங்கம வழிபாட்டால் மிக உன்னத நிலையை அடைந்த நாயனார் யார்?
14. கோயிலில் தினமும் நடை பெறும் ஆறுகாலப் பூசையையும் வரிசைக் கிரமமாகத் தருக.
15. இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டும் உற்சவம் எது?
16. உற்சவத்தின் ஆரம்பத்தில் ஊர் நன்மை பெறுவதற்காக வைரவமூர்த்திக்குச் செய்யப் படும் பூசை எது?
17. படைத்தல் தொழிலைக் குறிக்கும் திரு விழாக்கள் எவை?
18. அழித்தல் தொழிலைக் குறிக்கும் திரு விழாக்கள் எவை?
19. கொடியேற்றம் குறிக்கும் தத்துவம் எது?
20. கொடிமரத்தில் சுற்றியுள்ள சீலை எதனைக் குறிக்கிறது?

**ஊன நடனம்**

| | |
|---|---|
| உடுக்கை ஏந்திய கரம் | படைத்தல் |
| அபய கரம் | காத்தல் |
| அக்கினி ஏந்திய கரம | அழித்தல் |
| ஊன்றிய திருவடி | மறைத்தல் |
| தூக்கிய திருவடி | அருளல் |

**நடேசர் அபிஷேகம்**

| | | |
|---|---|---|
| மார்கழி | திருவாதிரை | திருவனந்தல் |
| மாசி | பூர்வ சதுர்த்தசி | காலைச்சந்தி |
| சித்திரை | திருவோணம் | உச்சிக்காலம் |
| ஆனி | உத்தரம் | சாயரட்சை |
| ஆவணி | பூர்வசதுர்த்தசி | இரண்டாங்காலம் |
| புரட்டாதி | பூர்வ சதுர்த்தசி | அர்த்தசாமம் |

# தீவினை அகற்றும் திருநீறு.

செ. நவநீதகுமார்

சிவ சின்னங்கள் என்று போற்றப் படுபவை விபூதி உருத்திராக்கம் என்பனவாம். இவை இரண்டும் சைவர்கள் அவசியமாகத் தரிக்க வேண்டியவை. திருநீறு பூசாதவரின் முகம் சுடுகாட்டிற்குச் சமன். இதனால் ஔவைப்பாட்டியும் *நீறில்லா நெற்றி பாழ்* என்றார்.

பெரு நோய்கள் வந்தாலும் அஞ்சேன் பிறப்பதற்கோ, பிறந்தபின்பு இறப்பதற்கோ அஞ்சமாட்டேன், திருநீறு அணியாதவர்களைக் கண்டால் அஞ்சுகின்றேன் என்று கூறுகின்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடு இறப்பு மஞ்சேன்
துணிநிலா அணியி னான்தன் தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்து காணச் சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநா மஞ்சு மாறே.

இறைவன் திருநீறு அணிந்துள்ளான். நீறு சேர்வதோர் மேனியர், சுண்ணவெண்ணீறணிந்து, வெண்ணீறா, பொடியேறு திருமேனி, நீறு தாங்கிய திருநுதலான், பூசுவதும் வெண்ணீறு, நீறணிபவளக்குன்றம் என்றெல்லாம் இறைவன் மேனியில் திருநீறு பூசப்பட்டுள்ளதைத் திருமுறைகள் கூறும்.

ஆன்மாக்கள் திருநீற்றை அணிந்து உய்தி பெற வேண்டும் என்ற உயர் நோக்கில் இறைவன் நீறு அணிந்துள்ளான். திருநீறு அணியாத இடத்தில் இலக்குமி கடாட்சம் இருக்காது. இதை *திரு வெண்ணீறணியாத திருவிலூரும்* என்று கூறுவர் அப்பரடிகள். திருநீறு அணியாது செய்யும் பூஜை, வழிபாடு, சிவத்தொண்டுகள், திருமுறைப்பாராயணம் என்பன பயனளிக்க மாட்டாது.

திருநீறு தரிப்பவர்களை நோய் அணுகாது, தீயசக்திகள் தாக்காது, பாவங்கள் நீங்கும், வினைகள் விலகும், பிறவித்துன்பம் நீங்கும். போரில் அணியும் கவசமானது அவன் உடலை ஆயுதங்களினின்றும் காப்பது போல் திருநீறும் தன்னைத் தரிப்பவர்களைக் காத்துக் கொள்ளும், கவசத்திருநீறு என்பர் திருமூலர்.

இறைவன் மேனியில் அணிந்து கொள்ளும் திருநீற்றை நாமும் மகிழ்வுடன் பூசினால் எம்மில் வினைகள் தங்காது. சிவகதியாகிய இறைவன் திருவடிப் பேறு கிடைக்கும்.

கங்காளன் பூசும் கவசத்திரு நீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாருஞ் சிவகதி
சிங்காரமான சிவகதி சேர்வரே.

திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி என்று வேண்டிநிற்பர் அப்பர் பெருமான். நாம் எப்பெருளைத் தீயிலிட்டாலும் அது எரிந்து கரியாகும். ஆனால் கருமை நிறம் பொருந்திய பசுஞ்சாணத்தை தீயில் இடும்போது அது எரிந்து வெண்ணிறமாகிறது. *வெள்ளைக்கில்லைக் கள்ளச்சிந்தை.* என்ற முது மொழிக்கிணங்க வெண்ணீறு அணிபவர்கள் மனமும் தூய்மையாக இருக்கும். *மாசிலாத மணிதிகழ் மேனிமேற் பூசு நீறு போல் உளமும் புனிதர்கள்* அடியவர்கள் என்று பெரிய புராணம் கூறுகின்றது. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் பிடிசாம்பலாகுவர் என்ற தத்துவத்தை உணரவைப்பது திருநீறு.

திருநீற்கு இரட்சை, விபூதி, ஷாரம், பஸ்மம், பசிதம் எனப் பெயர்கள் உண்டு. ஆன்மாக்களை பிறவித்துன்பத்தினின்றும் ரட்சித்தலால் இரட்சை எனப்படும். தன்னைப் பேணி அணிபவர்களுக்கு மேலான செல்வத்தைத் தருதலால் விபூதி எனப்படும். மலங்களை அகற்றுவதால் ஷாரம் என்று பெயர். பாவங்களை நீறாக்குவதால் பஸ்மம் எனவும் பெயர் பெறும். தன்னை அணிபவர்களுக்கு ஞானத்தைக் கொடுப்பதால் பசிதம் என்றும் பெயர் பெறும்.

விபூதி, கற்பம், அனுகற்பம், உபகற்பம் ஆகிய முறைகளில் பெறப்படும். கிழப்பசு, கன்றீன்று அண்மித்த பசு, வியாதியுடைய பசு, மலட்டுப் பசு, கன்று இறந்த பசு ஆகிய இப்பசுக்களில் இருந்து பெறப்படும் கோமயம், வீபூதிக்கு ஆகாது. இவை ஒழிந்த ஏனைய பசுக்களின் கோமயம் எடுத்துக் கொள்ளலாம்.

பங்குனி மாதம் வைக்கோல் உண்ட பசுவிலிருந்து கோமயம் பெறுவது சிறந்ததாகும். அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பூரணை ஆகிய தினங்களொன்றில் பசுக்களை வணங்கி கோமயம் பூமியில் விழுமுன் சத்தியோசாத மந்திரம் சொல்லித் தாமரை இலை அல்லது வாழையிலையில் ஏந்திக் கொள்க. கோமயம் எடுக்கும் முறை சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூன்று வகைப்படும். சாந்திகமாவது, கோமயத்தைக் கையில் ஏந்தி எடுத்தலாகும். பௌட்டிகம் கோமயம் நிலத்தில் விழுமுன் தாமரையிலை அல்லது வாழையிலையில் எடுத்தல். காமதமாவது நிலத்தில் விழுந்தபின்பு எடுத்தல்.

**ஏழுவகைத் தாண்டவம்**

**காளிகா தாண்டவம்,**
**கௌரி தாண்டவம்,**
**சந்தியாதாண்டவம்,**
**உங்கார தாண்டவம்,**
**திரிபுரதாண்டவம்,**
**ஊர்த்துவ தாண்டவம்,**
**ஆனந்தத் தாண்டவம்.**

இங்ஙனம் கோமயத்தை மேலுங்கீழுந் தள்ளி வாமதேவ மந்திரம் சொல்லி பஞ்சகவ்வியம் விட்டுப் பிசைந்து உருட்டி, தற்புரு' மந்திரம் உச்சரித்து நெற்பதர் பரப்பி அதன் மேல் உலரவிடுக. இதை சிவாக்கினியில் தகிக்கவும். இவ்வாறன்றி உடனே சுட்டும் திருநீற்றினைப் பெறலாம்.

இவ்வாறு பெறப்படும் வீபூதியில் --- பகுதிகளைத் தள்ளி ஈசான மந்திரத்தை உச்சரித்து எடுக்கவும். இதில் கருநிற விபூதி, செந்நிற விபூதி, புகை நிற விபூதி, பொன்னிற விபூதி என்பவற்றை நீக்கி வெண்ணிற விபூதியையே கொள்ளவேண்டும்.

வெண்ணிற விபூதியே அணியத்தகுந்ததாகும். கருநிற விபூதி வியாதியைக் கொடுக்கும். புகை நிற விபூதி ஆயுளைக் குறைவாக்கும். பொன்னிற விபூதி செல்வத்தைக் கெடுக்கும். இவ்விதமாகப் பெறப்பட்ட விபூதியை வஸ்த்திரத்தால் வடிகட்டிப் புதிய பாத்திரத்துள் இட்டு அதனுள் மல்லிகை, முல்லை, பாதிரி, இருவாட்சி முதலிய வாசனையுள்ள மலர்களை இட்டு அப்பாத்திரத்தின் வாயை புதிய வஸ்த்திரத்தால் கட்டிச் சுத்தமான இடத்தில் வைக்கவும்.

இவ்விதமாக மந்திரங்களோடு கூடப்பெறப்படும் விபூதி கற்பமாகும். அனுகற்பமாவது சித்திரை மாதத்தில் கானகத்திற்குச் சென்று அங்கு உலர்ந்திருக்கும் கோமயத்தை எடுத்து அதைத் தூளாக இடித்து பஞ்சகவ்வியம் விட்டுக் குழைத்து

பதர் மேல் வைத்து உலர்த்தி, அக்கினியில் தகித்துப் பெறப்படுவது. காடு இயற்கையாகத் தீப்பற்றும் போது உண்டாகும் சாம்பலை எடுத்து மந்திரத்தால் சுத்தி செய்து பெறுவது உபகற்பமாகும். பூமியில் அல்லது மலையில் விளையும் விபூதி அகற்பம் எனப்படும். இவ்வகை விபூதியை மூல மந்திரம் என்பவற்றால் சுத்தி செய்து அணியலாம்.

விபூதியை பட்டுப்பையிலேனும், புலித்தோல், மான்தோல் ஆகியவற்றால் ஆக்கப்பட்ட பையிலேனும், சுரைக்குடுக்கை, வில்வக்குடுக்கை என்பவற்றிலேனும் வைத்துத் தரிக்கலாம். திருநீற்றைச் சிவன் எனவும் நீறு இருக்கும் பாத்திரத்தை சிவாலயமெனவும் மதிக்க வேண்டும்.

# திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த திருநீற்றுத் திருப்பதிகம்.

தலம் : திருவாலவாய் பண் . காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வத நீறு திருவால வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 6

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மாலவா யான் திருநீறே. 10

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருவைந்தெழுத்து நடனம்.

| | | |
|---|---|---|
| "ந" கரம் | - | திருவடி, அக்கினி ஏந்திய கரம் |
| "சி" கரம் | - | உடுக்கை ஏந்திய கரம், |
| திருத்தோள் | | |
| "ம" கரம் | - | திருவயிறு, ஊன்றிய திருவடி |
| "வா" கரம் | - | வரத கரம் |
| "ய" கரம் | - | அபய கரம், திருமுடி |
| "வா" கரம் | - | திருமுகம். |

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| தை | 1 | 14. 1. 98 | புதன் | தைப்பொங்கல் |
| | | | | உத்தராயண புண்ணிய காலம் |
| | | | | பகல் 1.24 முதல் 7.52 வரை. |
| | 3 | 16. 1. 98 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| | 5 | 18. 1. 98 | ஞாயிறு | சண்டேசுரர் குருபூசை |
| | 9 | 22. 1. 98 | வியாழன் | தாயுமான சுவாமி குருபூசை |
| | | | | திருநீலகண்டர் குருபூசை |
| | 11 | 23. 1. 98 | சனி | ஏகாதசி விரதம் |
| | 12 | 24. 1. 98 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | 14 | 27. 1. 98 | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| | 17 | 30. 1. 98 | வெள்ளி | அப்பூதியடிகள் குருபூசை |
| | 18 | 31. 1. 98 | சனி | சதுர்த்தி விரதம் |
| | 20 | 2. 2. 98 | திங்கள் | கலிக்கம்பர் குருபூசை |
| | 22 | 4. 2. 98 | புதன் | கார்த்திகை விரதம் |
| | 25 | 7. 2. 98 | சனி | வீம ஏகாதசி விரதம் |
| | | | | கண்ணப்பர் குருபூசை |
| | 26 | 8. 2. 98 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | | | | அரிவாட்டாயர் குருபூசை |
| | 28 | 10. 2. 98 | செவ்வாய் | தைப்பூசம் |
| | 29 | 11. 2. 98 | புதன் | பூரணை விரதம் |
| | 30 | 12. 2. 98 | வியாழன் | விஷ்ணுபதி புண்ணிய காலம் |
| | | | | மாலை 5.51 முதல் இரவு 12.19 வரை. |

